REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆடி 7உ சனி (23—7—55) ★ ★ வெளியூர்: ஆடி 8உ ஞாயிறு (24—7—55) [இதழ் 34

சென்னை சர்க்கார் கவனத்திற்கு!

பீகாரின் இரண்டாம் திட்டம்-ரூ. 600 கோடி மதிப்பு

பீகார் மாநில சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ. 600 கோடி மதிப்பிடப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது.

நீர்ப்பாசனத்திற்குமட்டும் ரூ. 91 கோடியும் கல்வி அபிவிருத்திக்கு ரூ. 62 கோடியும் செலவிட உத்தேசமாம்.

பஞ்சாபில் மீண்டும் தலைவர் ஆட்சியா?

தீண்டாமை ஒழிப்புச் சுவரொட்டிகள்

விபீஷணர்களின் விபரீதச் செயல்

குடந்தையில் நடந்ததென்ன?

குடந்தை, ஜூலை 21—

நேற்றிரவு சுமார் 10-30 மணியளவில் பி. சோ. கட்சியினர், தமிழரசுக் கழகத்தார், அருள்நெறித் திருக்கூட்டத்தார் ஆகிய சிலர், நகர தி. மு. கழகத்தினரால், நகரில் தட்டிகளில் ஒட்டப்பட்டிருந்த 'தீண்டாமை ஒழிப்புச் சுவரொட்டி'களில் தார் பூசிச் சென்றனர்!

காந்தி பூங்கா சமீபத்தில் இருந்த தட்டியில் தார் பூசுகையில் அங்கிருந்த மக்கள் ஆத்திரங்கொண்டு மேற்படி கட்சிக்காரர்களைத் தாக்கியுள்ளனர். அடிபட்டவர்கள் அரைகுறையாகத் தார் பூசிவிட்டு ஓடிவிட்டனர்; விவரம் அறிந்து, கழகச் செயலாளரும், தோழர்களும் உடனே அங்கு சென்று, மீண்டும் போஸ்டர் ஒட்டினர்.

நகரெங்கும் இது விவரம் தெரிந்துவிட்டது; மீண்டும் பல்வேறு இடங்களில் போஸ்டர் ஒட்டப்பட்டது; கம்பீரமாக போஸ்டர் இருக்கிறது. (ந. நி)

கிளர்ச்சிகள் பற்றி பெரியார் கருத்து

பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் 'கிளர்ச்சிகள்' என்ற தலைப்பில் 13—5—53 'விடுதலை' இதழில் தி. மு. கழக ஜூலைப் போராட்டத்திற்கு முன் வெளியிட்டுள்ள கருத்துக்களில் சில வருமாறு:—

"சென்னை இராஜ்யத்தில் கிளர்ச்சிகள் மலிந்து விட்டன;

"கம்யூனிஸ்டுகளின் கிளர்ச்சிகள் பல நடக்கின்றன;

"எல்லைத் தகராறுகள் கிளர்ச்சிகள் வேறு நடக்கின்றன;

"சென்னையில் டிராம்வே தொழிலாளர்கள் கிளர்ச்சி ஒருபக்கம் குமுறிக்கொண்டிருக்கிறது;

"இவை தவிர, கண்ணீர்த் துளிகள் ஒருபுறம் கிளர்ச்சி துவக்க சங்கநாதம் செய்துகொண்டு இருக்கிறார்கள்;

'இன்னும் பல கிளர்ச்சிகள் தோன்றலாம் என்பதாகவும் தெரியவருகிறது;

"சாதாரணமாக, சர்க்கார் நேர்மையாக நடந்துகொண்டுவந்தால், இவற்றுள் பெரும் பாகம் கிளர்ச்சிகள் நடைபெற வேண்டிய அவசியமே இருக்காது.

"கண்ணீர்த்துளிகள் செய்யப்போகும் கிளர்ச்சி என்பது அற்ப விஷயம் என்று மக்கள் கருதுவதானாலும், தமிழ் நாட்டில் உள்ள ஊர்களுக்கும், முக்கிய தெருக்களுக்கும், பூங்காக்களுக்கும், வடநாட்டான் பெயர்கள்—அதிலும் சிலவற்றிற்கு வடநாட்டு முதலாளிகள் பெயர்கள் இடுவது, வழங்குவது என்றால், இந்த நாடு, மானமற்ற அடிமை ஆட்சி நாடு என்றுதான் சொல்லப்பட வேண்டும்;

"இந்தக் கிளர்ச்சிக்காரர்களுக்குள் ஒற்றுமை இல்லாததாலும், கிளர்ச்சிகள், தாங்கள் உயிருடன் இருப்பதைக் காட்டிக்கொள்வதற்கு ஆகவும், எங்கே ஒருவர் வெற்றி பெற்றுவிடுவாரோ என்று ஒருவர் மீது ஒருவர் பொறாமைப் படுவதாலும், இவை நல்லவண்ணம் வெற்றி தருமா என்பது பற்றிக் கவலைப்பட வேண்டி இருக்கிறது;

"கம்யூனிஸ்டுகள் தவிர்த்த மற்ற கிளர்ச்சிக்காரர்கள் ஒரு பொது மாநாடு ஏற்பாடு செய்து, கூடுமான அளவுக்கு அந்த மாநாடு முடிவுப்படி நடப்பதாக முடிவு செய்துகொண்டு, கட்டுப்பாடாகக் கிளர்ச்சி துவக்கினால் வெற்றி பெரிதும் நிச்சயமேயாகும்; எப்படியாவது இக்கிளர்ச்சிகள் வெற்றிபெற்றே ஆகவேண்டும்;

"இதை, கிளர்ச்சிக்காரர்கள் கவனிப்பது நலம்; அல்லது, அவரவர்கள் இஷ்டப்படி நடப்பதும் குற்றமல்ல. உணர்ச்சியையும், உற்சாகத்தையும் பொறுத்த விஷயங்களுக்குத் தம் கடமையைச் செய்கிறோம் என்ற அளவில் செய்ய வேண்டியதேயாகும்."

மந்திரி சபை வீழ்ச்சியுறும்?

நீடித்து காங்கிரஸ் ஆட்சியில் இருக்க முடியாதாம்!

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தேபருடன் பஞ்சாப் முதன் மந்திரி பீம்சேன் சச்சார் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது, பஞ்சாப் முதன் மந்திரி, சட்டசபையில் தம்மீது நம்பிக்கை கோரி வாக்கெடுப்பு நடத்தப் போவதாக அறிவித்திருந்தது குறித்தும் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

காங்கிரஸ் மேலிடத்தைக் கேட்காமலேயே சச்சார் அவ்விதம் அறிவித்திருப்பது இங்குள்ள காங்கிரஸ் தலைவர்களுக்கு ஆச்சரியமூட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

சச்சாரின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளாத காங்கிரஸ் தலைமைப்பீடம், நம்பிக்கை கோரி வாக்கெடுப்பு நடத்த பீம்சேன் சச்சாரை அனுமதிக்குமா என்பது சந்தேகம்தான் என்றும் கூறப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

அடிக்குது யோகம்—பார்ப்பனருக்கு!

★

பார்ப்பனருக்கு யோகம் அடித்திருக்கிறது!

எந்த இடத்திலிருந்து அவர்கள் பெரும் எதிர்ப்பை எதிர்பார்த்திருந்தார்களோ—அங்கே இருந்து அன்பும், அரவணைப்பும், ஆதரவும் கிடைக்கின்றன!

'பார்ப்பானே—வெளியேறு! அக்கிரகாரத்தைக் கொளுத்துங்கள்! பெட்ரோலும் தீப்பந்தமும் தயாராக வைத்திருங்கள்! நாள் குறிப்பிட்டதும் கொளுத்துங்கள்!'—என்று, பெரியாரின் திராவிடக் கழகம் முழக்கமிட்டுவந்தது கேட்டு, பீதி அடைந்த பார்ப்பனருக்கு, இப்போது பெரியாரிடமிருந்தே அன்புரை கிடைக்கிறது!

பார்ப்பனர்களை, **எங்களவர்கள்** என்று பெரியார் அன்புடன் அழைத்திருக்கிறார்.

'விடுதலை' 21-7-55-ம் நாள் இதழில், பெரியார், "காங்கிரஸ்காரரையும், **பார்ப்பனர்களையும்,** மாற்றுக் கட்சிக்காரர்களையும், மற்ற தமிழ் நாட்டை தாய்நாடாக—தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களையும், செல்வர்களையும், புலவர்களையும், **எங்களவர்** என்பதாகக் கொண்டே இக்கிளர்ச்சி துவக்கி இருக்கிறோம்," என்று எழுதியுள்ளார். இப்படியல்லவா, 'யோகம்' அடிக்கவேண்டும்!

எங்களவர்!—என்று செல்லமாக அழைக்கிறார் பெரியார்!!

இனி ஏன் அச்சம்!—பார்ப்பனர்காள்! உங்களுக்கு இனி ஒரு குறையும் இல்லை!

நீங்கள், '**எங்களவர்**' ஆகிவிட்டீர்கள்—பெரியாரின் பேருதவியால்!

'சிந்தியா'வின் பணிவு

சென்னை-இரங்கூனுக்கு இடையே மீண்டும் கப்பல் விட முடிவு

புதுடில்லி, ஜூலை 22—

சிந்தியா கப்பல் போக்குவரத்து நிறுவனத்தார், மீண்டும் சென்னைக்கும்—இரங்கூனுக்கும் இடையில் கப்பல் விடுவதற்கு முடிவெடுத்திருப்பதாகத் தெரிகிறது.

வேறு ஒரு கப்பலைப் பெறும் வரையில், 'எஸ். எஸ். சோனாவதி' என்ற கப்பல் அந்த வழியில் விடப்படுமாம்.

ஆகஸ்டு முதல் வாரத்திலிருந்து கப்பல் போக்குவரத்து துவங்கலாமெனத் தெரிகிறது.

கடந்த ஜூன் மத்தியில் இந்தக் கப்பல் போக்குவரத்து நிறுவனத்தார், தாங்கள் நடத்திவந்த 'ஜலகோபால்' கப்பல் போக்குவரத்தை கப்பல் மிகப் பழையதாகிவிட்டதென்றும், இந்தப் போக்குவரத்து இலாபகரமானதாக இல்லை என்றும் கூறி நிறுத்திவிட்டதும், அதற்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டதும் நினைவிருக்கலாம்.

காலம் மாறுகிறது

பிரிட்டிஷ் உருக்குத் தொழிற்சாலையின் சரித்திரத்திலேயே முதல் தடவையாக, இந்தியத் தேனிரும்பை பிரிட்டிஷ் தொழிற்சாலை ஒன்று உபயோகிக்கவிருக்கிறதாம்.

மொத்தம் 1,984 டன் தேனிரும்பு இந்தியாவிலிருந்து பிரிட்டனுக்கு அனுப்பப்படவிருக்கிறது. மேலும் இந்தியாவிலிருந்து தேனிரும்பு இறக்குமதி செய்ய பிரிட்டிஷ் உருக்கு இரும்பு கார்ப்பொரேஷன் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறதாம்!

தலைமைக் கழகம்: அறிக்கை—23/55

திராவிடக் கழகத்தின் ஆகஸ்டு போராட்டம்

★

"திராவிடக் கழகத்தினர் தாங்களே கூடி, தாங்களே திட்டம் தீட்டி, ஆகஸ்டு முதல் நாள் நடத்தப் போகும் கொடி கொளுத்தும் போராட்டம் பற்றி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை என்ன என்று அறிய பலர் ஆவலுறுகின்றனர்.

"இந்தி எதிர்ப்பு நோக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு முற்றிலும் உடன்பட்ட ஒன்று என்றாலும், கொடி கொளுத்தும் ஆகஸ்டு போராட்ட முறை திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கலந்துகொண்டு தீட்டப்பட்டதுமல்ல—திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உடன்பாடானதுமல்ல;

"எனவே, திராவிடக் கழகத்தின் ஆகஸ்டுப் போராட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் கலந்து கொள்ளாது;

"திராவிடக் கழகத்தின் ஆகஸ்டுப் போராட்டம் பற்றி நான், நண்பர்களோடு கலந்து பேசிய கருத்துக்கள் விளக்கமாகவும், தெளிவாகவும் 23-7-55 'திராவிட நாடு' இதழில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன."

'அறிவகம்', சென்னை-13
23—7—55

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

தனியாகவே கடன் எழுப்புமாம்!

சென்னை சர்க்கார், வேறெந்த மாநிலத்துடனும் கூட்டுச் சேராமல் தனியாகவே ரூ 7 கோடி கடன் எழுப்பும் என்றும், இந்தக் கடன்பத்திரத்தின் விலை ரூ. 99—12—0 ஆக இருக்கும் என்றும் தெரிய வருகிறது.

நாடு கடத்தப்பட்ட மன்னர் திரும்புகிறார்

இதுவரை நாடு கடத்தப்பட்டிருந்த புகாண்டா மன்னர், கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள அவரது நாட்டுக்குத் திரும்பிச் செல்ல பிரிட்டிஷ் சர்க்கார் அனுமதித்துள்ளனராம்.

நம் நாடு
தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 23—7—'55 சனி

பேசும் புள்ளி விவரங்கள்

"வடக்கு வளர்ந்திருக்கிறது-- தெற்கு வளம் குன்றியிருக்கிறது; வடக்கு வாழ்கிறது—தெற்கு தேய்கிறது; வடநாடு மேலும் வளர வழி வகைகள் செய்யப்பட்டு வருகின்றன — பின்தங்கிய தென்னாடு வளருவதற்கு வழி ஏதும் காணோம்!"

என்ற உண்மையை நாம் எத்தனையோ ஆதாரங்களைக் கொண்டு எடுத்துக்காட்டி வருகிறோம்.

'வட நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் தென்னாட்டவரின் வாழ்க்கைத்தரத்தைவிட அதிகமிருக்கிறது,' என்று நாம் கூறியபோது, தென்னவரில் சிலர், நாம் கூறிய உண்மையை மறுத்துக் கூறத் துணிவில்லாவிடினும், மறைத்துவிட எத்தனித்ததுண்டு.

'வடக்கோ - தெற்கோ, கிழக்கோ-மேற்கோ—எல்லாப் பகுதி மக்களும் ஒன்றுதான்—ஒரே தரமான வாழ்க்கையுடையவர்கள்தான்—எல்லா மக்களுக்கும் உள்ள பிரச்சினைகள் ஒன்றுதான்,' என்று கூறி, அந்தப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம்—தாங்கள் கூறும் 'சர்வ ரோக சஞ்சீவி' மட்டுமே—என்று வாதிட முற்பட்டவர்களும் உண்டு.

ஆனால், அந்த அநியாயக்காரர்களின் கூற்றுக்கு மாறுபட்டதாகவன்றோ உண்மை இருக்கின்றது.

'விவசாயத் தொழில் புரியும் குடும்பம் ஒன்றின் சராசரி வருமானம் வடநாட்டில் ஆண்டொன்றுக்கு ரூ. 551; ஆனால், தென்னாட்டில் ரூ. 382 மட்டுமே,' என்று, டில்லி ஆட்சியாளர்கள் கடந்த 1950—51ல் மேற்கொண்ட விவசாயத் தொழில் பற்றிய விசாரணையின்போது அறிய வந்திருக்கிறது. இதுபற்றிய செய்தி கடந்த திங்களன்று வெளிவந்தது.

அதுமட்டுமா? விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு ஆண்டில் வேலை கிடைக்காமற் போகும் நாட்கள் வடநாட்டைவிட தென்னாட்டில்தான் அதிகம்—அதாவது, வடநாட்டவருக்கு வேலை கிடைக்காதிருப்பது 44 நாட்களுக்கு மட்டுந்தான்; ஆனால், தென்னாட்டவருக்கு ஒரு ஆண்டில் 115 நாட்களுக்கு வேலை கிடைப்பதில்லை.

இந்தப் புள்ளி விவரங்கள் எதை எடுத்துக் காட்டுகின்றன?

"வடநாட்டு விவசாயிகளுக்கு தென்னாட்டு விவசாயிகளைவிட அதிக வருமானம் கிடைக்கிறது; தென்னாட்டு விவசாயிகள், வடநாட்டவரைவிட அதிகமான நாட்கள் வேலையற்றுக் கிடக்கின்றனர்—அதாவது, பட்டினி கிடக்கின்றனர்,"

என்பதைத்தானே, அந்தப் புள்ளி விவரங்கள் நமக்குச் சொல்லுகின்றன?

'ஏக இந்தியா' என்பது உண்மையானால் — 'காஷ்மீர் முதல் குமரிமுனைவரை ஒரே நாடு; அங்கு வாழும் எல்லோரும் ஒரே நாட்டவர்; ஒரே நிறையும் சமஉரிமையும் பெற்றவர்கள்' என்பது உண்மையானால்—ஏன், இந்த வேறுபாடு இரு பகுதி விவசாயிகளிடையேயும் இருக்க வேண்டும்? 'ஏக இந்திய' அரசியல்வாதிகள் இதுபற்றி சிந்திக்க வேண்டாமா?

'டெல்லி ஆட்சியாளர்கள், எல்லா மக்களையும் ஒரேமாதிரியாகத்தான் நடத்துகிறார்கள். வடநாடு—தென்னாடு என்று பிரித்து, வடநாட்டவரை வாழ்விக்கவும், தென்னாட்டவரை அலட்சியப்படுத்தவும் எண்ணி காரியங்கள் செய்யவில்லை,' என்பது உண்மையானால்—எந்தத் துறையிலும் தென்னாடு வளரக்கூடாது என்று டில்லி ஆட்சியினர் கருதியிருக்கவில்லை என்பது உண்மையானால்—இந்த விவசாயி மக்களின் வாழ்க்கைத் தரத்தில் காணப்படும் இந்த ஏற்றத் தாழ்வுகளைப் போக்க டில்லி ஆட்சியினர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன? 'ஏக இந்திய' அரசியல்வாதிகள் சிந்திக்க வேண்டியதல்லவா இது?

வடநாட்டு விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தைப் போல தென்னாட்டவரும் பெறுவதற்கு டில்லி சர்க்கார் கடந்த காலத்தில் மேற்கொண்ட முயற்சிகள் என்ன?

திட்டப்பட்ட ஐந்தாண்டுத் திட்டம் வடநாட்டவரின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த மட்டுமே பயன்பட்டது-பயன்படுகிறது; தென்னாட்டவரை உயர்த்தத் திட்டங்களே இல்லாது போய்விட்டது என்ற உண்மைதான் இன்று உலகறிந்த ஒன்றாயிருக்கிறதே!

'இந்தியப் பேரரசினர், தென்னாட்டவரின் நல்வாழ்க்கையில் அக்கரைகொண்டவர்களல்லர்,' என்பதை, நியாயவான்களுக்குச் சொல்ல—அவர்கள் தீட்டிய முதல் ஐந்தாண்டுத் திட்டம் நிலையான சான்றாக இருக்கிறதே!

'வடநாட்டு ஆட்சியாளர்கள் ஏகாதிபத்தியவாதிகளல்லர்—தென்னாட்டை அவர்கள் ஆதிக்கம் செலுத்த விரும்பவில்லை,' என்பது உண்மையானால், ஏற்கனவே வளம் குன்றி, பின்தங்கிக் கிடக்கும் தென்னாட்டவரின் வாழ்வு உயர அல்லவா அவர்கள் அதிகமான கவனம் செலுத்தியிருக்க வேண்டும்? அதுதானே நியாயம்? நேர்மை? பாரபட்சமற்ற தன்மை? எல்லோரையும் ஒன்றாகக் கருதும் பெருநோக்கு?

ஆனால், இந்தியப் பேரரசின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிப்போருக்கு, 'தென்னாட்டை என்றென்றைக்கும் இந்தத் தாழ் நிலையிலேயே எல்லாத் துறைகளிலும் வைத்திருந்து ஆதிக்கம் செலுத்தி, தென்னாட்டவரின் உழைப்பின் விளைவுகள் — உரிமைகள் — செல்வங்கள் ஆகியவற்றைக் கொண்டே வடநாட்டவரின் வாழ்வை உயர்த்திக்கொள்ள எண்ணும் சுரண்டல் புத்தி கொண்ட ஏகாதிபத்தியவாதிகளே வடநாட்டவர்,' என்பதை உணரமுடியும்.

இதைத்தான், விவசாயக் குடும்பங்கள் நிலைபற்றி வந்துள்ள புள்ளிவிவரங்கள் சொல்லுகின்றன.

அந்த 'பேசும் புள்ளி விவரங்களை' சென்னை ஆட்சியாளரும், 'ஏக இந்திய' அரசியல்வாதிகளும் உற்றுநோக்குவராக!

சம்பாதிக்காது பிறரை நம்பி வாழ்வோர்

இந்தியாவில் 60 சதவிகிதத்திற்கும் அதிகமாம்!

இந்தியாவில் உள்ள மொத்தம் 35,66,00,000 பேரில், 10,44,00,000 (29.3 சதவிகிதம்) பேர் மட்டுமே தாங்களாகவே சம்பாதித்து வாழ்பவர்கள் என்றும், 3.79 கோடி பேர் (10.6 சதவிகிதம் பேர்) சம்பாதித்தும் பிறரைச் சார்ந்திருப்பவர்கள் என்றும், 21.43 கோடி பேர் (60.1 சதவிகிதம்) சம்பாத்தியம் ஏதுமின்றி பிறரை நம்பி வாழ்பவர்கள் என்றும் 1951-ம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்குப்படி குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

1921-க்குப் பிறகு இந்தியாவில் மக்கட் பெருக்கம் வேகமாகவும், தங்கு தடையின்றியும் அதிகரித்திருக்கிறது; ஆனால் விவசாயப் பெருக்கம், அதற்குச் சமமான அளவு வளரவில்லை — விரிவாகவில்லை.

தாங்களாகவே சம்பாதித்து வாழ்பவர்களில், 1,044 லட்சம் பேர்களில் 857 லட்சம் பேர்கள் (சுமார் 82.1 சத விகிதத்தினர்) கிராமங்களில் வாழ்பவர்கள் என்றும், 187 லட்சம் பேர் மட்டுமே (17.9 சத விகிதத்தினர்) நகர்ப்புறங்களில் வாழ்பவர்கள் என்றும் தெரிய வருகிறது.

ஆரம்பப் பள்ளிகள்!

குற்றங்கள் நடைபெறும் நடுநிலையங்களாம்!

ஆந்திர சட்டசபையில் புகார்

"மாநிலத்திலுள்ள ஆரம்பப் பள்ளிகள் அனைத்தும் குற்றங்கள் நடைபெறும் நடுநிலையங்களாகவே இருக்கின்றன."

இவ்வாறு, ஆந்திர மாநில சட்டசபையில், காங்கிரஸ் உறுப்பினரான வி. இராகவலு என்பவர், மாநில கல்வி இலாகாவில் உள்ள பள்ளி மேற்பார்வை அதிகாரிகளின் தவறான நடத்தைகள் குறித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெயர்ப் புத்தகங்களில் காணப் பெறும் தவறுகளைக் கண்டும் காணாதவர்கள்போல் அதிகாரிகள் சென்று விடுகின்றனர். ஆனால், அப்பள்ளிகளுக்கு சர்க்கார் நிதி உதவி கிடைக்கச் செய்வதில் மட்டும் தீவிரம் காட்டுபவர்களாக இருக்கின்றனர். எதிர்பாராதவிதமாக—முன்னறிவிப்பு எதுவுமின்றி யாராவது வந்தால், மாநிலத்திலுள்ள பல பள்ளிகளிலுள்ள மாணவர்களைக் காட்டிலும் மிக அதிக அளவில் மரங்களைத்தான் காண முடியும்,"

என்றும், அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ரஷ்யாவிற்கு ஆட்சேபமில்லையாம்!

பாண்டுங் மாநாடுகளில் தகுதி பெற்றவை—இலங்கை உட்பட—ஐ. நா. சபையில் இடம் பெறுவதற்கு தங்கட்குத் தடங்கல் எதுவும் இல்லை என்று ரஷ்யா தெரிவித்திருப்பதாக பிரதமர் கொத்தலாவலைக்கு இந்தியப் பிரதமர் நேரு கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்

எதிர்பார்க்கும் மூலதன மதிப்பு குறைகிறது

மாநிலங்களில் திட்டங்கள் சுருங்கும்

புதுடில்லி, ஜூலை 22—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சர்க்கார் துறைத் திட்டங்கள் சுமார் ரூ. 4,300 கோடியில் உருவாகலாம் என முன்பு திட்டமிடப்பட்டிருந்தது போய், இப்போது, மூலதனம் கிடைப்பது தடைப்பட்டு விட்டிருப்பதால் திட்டங்களின் மதிப்பு ரூ. 800-கோடிக்குக் குறைந்து சுருங்கிவிடும் என்று தெரிய வருகிறது.

இதை ஒட்டி, மத்திய, மாநில சர்க்கார்கள் தாங்கள் ஏற்கனவே தயாரித்துள்ள திட்டங்களைச் சுருக்கிக்கொண்டு சரிக்கட்டிக்கொள்ள வேண்டியிருக்குமாம்.

பொது (அரசாங்க)த் துறைக்கு ஐந்தாண்டுத் திட்டத்திற்கெனத் திரட்டக்கூடியதெல்லாம் ரூ. 3,500 கோடியளவுதானிருக்க முடியும்; இதனைத்தான் வரி விதிப்பு விசாரணைக் குழுவும் சிபாரிசு செய்திருந்தது என்று கூறப்படுகிறது.

★

தனியார் துறைக்கு ரூ. 750 கோடி

தனியார் துறையில் நிலக்கரி, சர்க்கரை மற்றும் சிறு தொழில்களன்னியில், தொழில் துறையில் ஈடுபடுத்தும் மூலதன மதிப்பீடு ரூ. 750 கோடி என்று தெரியவருகிறது.

இரும்பு, எஃகு உற்பத்திக்காக ரூ 125 கோடி, உருக்கு வார்ப்புக்காக ரூ. 30 கோடி, கனரக மின்சாரப் பொருள்கள் உற்பத்திக்காக ரூ. 3 கோடி, மோட்டார் தொழிலுக்காக ரூ. 31 கோடி—என்றெல்லாம், அந்த மூலதனம் ஈடுபடுத்தப்படுமாம்.

பருத்தித் துணி உற்பத்திக்கு ரூ. 100 கோடி, சிமெண்டிற்கு ரூ. 67 கோடி, காகிதத்திற்கு ரூ. 66 கோடி, கனரக இயந்திரம்—இயந்திர சாதனங்களுக்கு ரூ. 60 கோடி, காஸ்டிக் சோடா—சோடா உப்புக்கு ரூ. 21 கோடி—என்ற வகையில், மற்றப் பகுதிகள் ஈடு செய்யப்படுமாம்.

நகர மன்றங்கள் சோம்பிக்கிடக்கின்றன

அதிகாரி தரும் சர்டிபிகேட்!

"நிறுவனங்களைப் பொறுத்தத் துறைகளில் மிகவும் ஒழுக்கக் கேடுகள்—குழப்பங்கள் மிகுந்து காணப்படுகின்றன;

"அலுவலகங்களில், பொருத்தமற்ற—நியாயமற்ற முறையில் சிப்பந்திகள் நியமனம் செய்யப்பட்டிருப்பது மிக சர்வ சாதாரணமாக இடம் பெற்றிருக்கிறது;

"நான் மாவட்டக் கழக அலுவலகப் பரிசோதனைக்காக சென்றிருந்தபோது, அங்கு, பிரதம அதிகாரி, தலைமை குமாஸ்தா, அக்கௌண்டெண்ட் ஆகியோர் அனைவரும் லீவு எடுத்துக் கொண்டு சென்றுவிட்டனர்; எனவே, எனக்குத் தேவைப்பட்ட தஸ்தாவேஜுகளோ, மற்றும் விவரங்களோ தெரிந்து கொள்ள இயலாமற்போய்விட்டது;

"நகர்மன்ற உறுப்பினர்களிடையே ஏற்படுகின்ற சச்சரவுகள், தகராறுகள் ஆகியவற்றின் காரணமாக நகர் மன்றம் வேலையற்றுக்கிடப்பதாலும், அதிகாரிகள் திறமை குன்றி இருப்பதாலும் சென்ற ஓராண்டு காலத்தில் நகர் மன்றம் எந்த விதமான குறிப்பிடத்தகுந்த பொதுப் பணியும் செய்ததாகத் தெரியவில்லை."

இவ்வாறு, பீஜப்பூர் நகரமன்ற அலுவலகத்தைச்சோதனை செய்யச் சென்று, அதன் திறமையின்மையையும் அதனுடைய பலவீனத்தையும் நேரில் கண்டறிந்த ஸ்தல ஸ்தாபன டைரக்டர் தம்முடைய அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

பீஜப்பூர் நகர மன்றத்தின் இத்தகைய நிர்வாகத் திறமையின்மை குறித்து சர்க்கார் ஆலோசித்து வருகிறதென்றும், 1954-ம் ஆண்டில், தன்னைத்தானே சீர்படுத்திக்கொள்ளும் வாய்ப்புக்கு 6 மாத காலத் தவணை ஒன்றை அந்த நகர மன்றத்திற்கு சர்க்கார் கொடுத்ததென்றும், ஆயினும் இது வரையிலும் அங்கு எந்தவிதமான முன்னேற்றமும் காணப்படவில்லை என்றும் அவ்வதிகாரி குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், நகர் மன்ற உறுப்பினர்கள் அனைவரின் நேர்மையற்ற—ஒழுக்கங்கெட்ட நடத்தைகளின் காரணமாகவே மன்றப் பொது உறுப்பினர்களின் கூட்டங்கள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டுக் கொண்டே வந்துள்ளன என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

ரடார் சாதனம்

கல்கத்தாவில் அமைக்க இந்திய சர்க்கார் முடிவு

விமானங்கள் வருகை பற்றி எச்சரிக்கக்கூடிய 'ரடார் சாதனத்தை கல்கத்தா டம்டம் விமான நிலையத்தில் அமைக்க இந்திய சர்க்கார் நிச்சயித்திருக்கிறது

தொலை தூரத்தில் புயல் உருவாவதை எச்சரிக்கும் ரடார் சாதனம் ஒன்று டம்டம் விமான நிலையத்தில் சென்ற ஓராண்டாக இயங்கி வருகிறது.

சட்டசபை எதிர்க்கட்சியினர் வெளியேற்றம்

பாடியாலா, ஜூலை 20—

சீக்கிய மதக் கோவில்களை ஜனநாயக ரீதியில் நிர்வகிக்க வேண்டும் என்பதற்கான சட்டம் ஒன்றைக் கொண்டுவர சர்க்கார் தவறிவிட்டிருப்பதைப் பற்றி விவாதிப்பதற்காக, தாங்கள் கொண்டுவந்த ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றை சபைத் தலைவர் அங்கீகரிக்க மறுத்துவிட்டதின் விளைவாக, பெப்சு சட்டசபை எதிர்க்கட்சியினர் சபையைவிட்டு வெளியேறியிருக்கின்றனர்.

பெப்சு முதன் மந்திரியான பிரிஷ்பன், சீக்கியர்களின் உணர்வுகளை தாம் மதிப்பதாயும், இதுபற்றி சபையின் இந்தக் கூட்டத் தொடரிலேயே முக்கியமானதோர் அறிவிப்பு தருவதாயும் வாக்களித்திருந்தும், எதிர்க்கட்சியினர் வெளியேறிவிட்டிருக்கின்றனர்.

பின்னர் சிறிது நேரம் கழித்து அவர்கள் மீண்டும் சபைக்கு வந்திருந்தனர்.

அது அங்குதானே!

அமெரிக்காவில், நாளுக்கு நாள் அநேகருக்கு வேலை கிடைக்கிறதாம்; தனிப்பட்டவர்களின் வருமானமும் இதுவரை இல்லாத முறையில் அதிகமாகிக்கொண்டு வருகிறதாம்!

1955 மே திங்களில் தனிப்பட்டவர்களின் ஆண்டு விகித வருமானம் 30,100 கோடி டாலர்; சென்ற மார்ச் 30 முடியக் கணக்குப் பார்த்தால், 29,350 கோடி டாலர்.

ஜூன் திங்களில் பணிபுரிந்தோர் தொகை 6,40,16,000; சென்ற ஆண்டின் தொகை 6,20,98,000.

அணு உலையில் தயாரான மின்சாரம்

முதல் முறையாக விற்பனைக்கு வந்துள்ளது

வெஸ்ட் மில்டன் (நியூயார்க்) ஜுலை 22—

அமெரிக்க அணுசக்தி கமிஷன் தலைவர் 19-ந் தேதியன்று ஒரு மின்சார விசையை அமுக்கினர்; அணு உலை பிறப்பித்த மின்சாரம், கம்பிகள் வழியே சென்று பொது மக்களுக்குப் பயன்படுவதாயிற்று.

அணு உலை பிறப்பித்த மின்சாரம் வாணிப முறையில் வினியோகமாவது இதுவே முதன்முறை.

அணு உலைச் சிற்பி என்ரிக்கோ பெர்மியும், அவருடைய சகாக்களும், 1942-ல் சிக்காகோவில் இயற்றிய முதல் அணு அடுக்கை விட, இந்த அணு உலை, 50 லட்சம் மடங்கு சக்தி வாய்ந்தது.

பென்சில்வேனியாவில் இப்பொழுது அமைக்கப்படும் அணு உலை, பிட்ஸ்பர்க் பிரதேசத்துக்கு 60,000 கிலோவாட் மின்சாரம் வழங்குமென்றும், அது இரண்டு ஆண்டிற்குள் முற்றுப்பெறுமென்றும் கூறப்படுகிறது.

தனிப்பட்டவர் நடத்தும் கம்பெனிகள் அரசாங்கத்தின் உதவியில்லாமலேயே வாணிப முறையில் மின்சாரத்தை விற்பதற்கு அணு உலைகள் அமைக்கத் தயாராய் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்லூரிகளில் வட்டார மொழியில் போதனைத் திட்டம்

வழிவகை கூறுவதற்குக் குழு அமைப்பு

சென்னை சர்க்கார், பல்கலைக் கழகக் கல்லூரிகளில் பிரதேச மொழியையே—தமிழ்—போதனை மொழியாக்குவதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து கூறுவதற்கென ஒரு குழுவை நியமித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

நன்ருகத் தெரிந்து பழக்கத்தில் இருந்துவரும் கலைச் சொற்களையல்லாத மற்ற கலைச் சொற்களைத் தம் அகில உலகப் பொதுமொழியிலேயே வைத்துக்கொள்வது என்ற அடிப்படையில் கலைச்சொல் அகராதி ஒன்றைத் தயாரிக்கவும், அந்த அகராதியின் அடிப்படையில் மிக்க பிரசித்தி வாய்ந்த விஞ்ஞான, இதர நூல்களை மொழி பெயர்ப்பது ஆகியவை உட்பட மற்றமுள்ள பிரச்னைகள் குறித்தும் குழு ஆலோசனைகள் தெரிவிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இக்குழுவின் தலைவராக சென்னை பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரான டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிருர்.

பழக்கவழக்கத்தில் உள்ளதும் பல மொழிகளில் பிரபலமானதாகவும், ஒரு குறிப்பிட்ட பொருளைத் தருவதாகவும் உள்ள கலைச் சொற்களுக்குப் போதுமான மதிப்பு தரவேண்டுமென்றும், இதனைக் கருத்தில் நிறுத்தி அந்த மொழிக்குத் தகுந்தபடி அகில உலகக் கலைச் சொற்களை மாற்றி அமைத்துக் கொள்ளலாம் என்றும், சில மொழிகளில் மற்ற மொழிகளில் உள்ளதைவிட அதிக அளவில் பிரபலமான கலைச் சொற்கள் இருந்தால் அம்மொழிகளில் அக்கலைச் சொற்களையே வைத்துக் கொள்ளலாமென்றும், சென்ற 1947 மே 31-ந் தேதியன்று பெங்களூரில் நடைபெற்ற கலைச் சொற்கள் தயாரிப்புக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானத்தைக் கருத்தில் கொண்டு மேற்படி வேலையைச் செய்ய வேண்டுமென்று அக்குழுவை சர்க்கார் கேட்டுக் கொண்டிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விலை ஏற்றம் வியாபாரிகளாலேயே ஏற்பட்டதாம்!

பம்பாய் மந்திரி தகவல்

நாசிக் மாவட்டத்தில் ஒரு காகிதத் தொழிற்சாலை?

நாசிக், ஜுலை 20—

"அண்மையில் உணவுப் பொருள்களின் விலைகள் உயருவதற்குக் காரணம் போதுமான மழை பொழியாததோ, அன்றி தேவையான வாகன வசதி கிடைக்காததோ அல்ல; மாருக, வியாபாரிகள் 'செயற்கைப் பஞ்ச'த்தை உருவாக்கி, விலைகளை உயர்த்தி வருகின்றனர்," என்று, பம்பாய் காட்டிலாகா மந்திரியான ஒய். வி. சாவன் என்பவர் குறிப்பிட்டிருக்கிருர்.

மேலும் அவர், நாசிக் மாவட்டத்தின் மேற்குப் பகுதியில், ஏராளமாக விளையும் மூங்கிலைப் பயன்படுத்தி ஒரு காகித உற்பத்தித் தொழிற்சாலை நிறுவுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவதாயும் நாசிக் மாவட்ட மக்களுக்கு உறுதியளித்திருக்கிருர்.

ராணு பிரதாபன் தப்பிய விந்தை!

பண்டைக் காலச் செப்பேடு தரும் தகவல்

ஆமதாபாத், ஜுலை 22—

சர்வோத்திரா என்ற ஜாகிரை இராஜபுத்திர வம்சத்தைச் சேர்ந்த ஜாகிர்தார் ஒருவர் நிர்வகித்து வந்தார். அவரது காலத்தில், மொகலாயர்களால் துரத்தியடிக்கப்பட்ட பிரதாப் என்ற பெயருடைய ராணு ஒருவர், தம்மை அந்த மொகலாயர்களிடமிருந்து தப்புவிக்கும்படி அந்த ஜாகிர்தாரிடம் தஞ்சம் புகுந்தார்.

இதற்குள், ராணுவைத் துரத்தி வந்த மொகலாயர்கள், மேற்படி ஜாகிர்தாரிடம் சென்று 'ராணு எங்கே' என்று வினவ, அந்த ஜாகிர்தார், ராணுவைக் காப்பாற்றும் நோக்கத்தில், தமக்கு ராணுவைப் பற்றி ஒன்றுமே தெரியாது என்றும், தம்முடைய வீட்டில் தனது மகளையும், மருமகனையும் தவிர வேறு எவரும் இல்லை என்றும் கூறினராம். அதனை நம்பாத மொகலாயர்கள் வீட்டினுள் புகுந்து பார்க்க, ஜாகிர்தார் கூறியபடி அவரது மகளும் — மருமகனும் தம்பதிகள் படுக்கை அறையில் காணப்பட்டனராம்; படுக்கை அறையில் காட்சி தந்த அந்த இளைஞரை, ஜாகிர்தாரின் மணமாகாத மகள் என்பதும், தம்முடைய மருமகன் என ஜாகிர்தார் கூறியது உண்மையில் ராணுதான் என்பதும் மொகலாயர்களுக்குத் தெரியவில்லை!

சில காலம் சென்ற பின்னர், தன்னுடைய உயிரை வெகு சாமர்த்தியமாகக் காப்பாற்றிய அந்த ஜாகிர்தாருக்கு, மேற்படி ராணு, வேண்டிய அளவு பரிசுகளை வழங்கியதுடன், அவரது மகளையும் தனது மனைவியாக ஏற்றுக்கொண்டாராம்.

இது பண்டைக்கால சரித்திர உண்மையான ஒரு நிகழ்ச்சியாகும்.

இந்த ருசிகரமான சம்பவங்கள் நிறைந்த நிகழ்ச்சி சித்தரிக்கப்பட்டுள்ள பண்டைக்காலச் செப்பேடு ஒன்று ஆமதாபாத்தில் இருப்பதாகத் தெரிகிறது.

300 நவீன மோட்டார்கள்

அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, செக்கோஸ்லாவேகியா நாடுகள் கலந்துகொள்ளும் மோட்டார் காட்சி ஒன்று லண்டனில் நடைபெறும்.

சுமார் 300 நவீன மோட்டார்கள் இடம்பெறும் இக்காட்சியை மவுண்ட் பாட்டன் பிரபு திறந்து வைப்பார்.

பாவம்! ஆச்சரியார்!

இந்த ஆண்டுக்குள் 2,15,00,000 குழந்தைகளுக்கு பி. சி. ஜி. ஊசி குத்தப்படும்

"இந்த ஆண்டு இறுதிக்குள், இந்தியா முழுமையிலும் 6 கோடி 60 லட்சம் குழந்தைகளுக்கு க்ஷயநோய் சோதனை செய்யப்பட்டுவிடும்; 2 கோடி 15 லட்சம் குழந்தைகளுக்கு பி. சி. ஜி. ஊசி குத்தப்பட்டு விடும்,"

என்று ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதிக் குழு தகவல் தந்திருக்கிறது.

இத்துறையில் வேலை செய்பவர்களுக்கு விசேட அலவன்சுகள் கொடுக்க இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

★

திரு-கொச்சியில் 12-லட்சம் பேருக்கு பி. சி. ஜி. ஊசி!

திரு-கொச்சி மாநிலத்தில் 1949 லிருந்து இன்றுவரை, சுமார் 28 லட்சம் பேர் பரிசோதனை செய்யப்பட்டு 12 லட்சம் பேருக்கு காச நோய்த் தடுப்புக்கான பி. சி. ஜி. ஊசி குத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பி. சி. ஜி. ஊசி குத்திக்கொண்டவர்களில் 80 சதவிகிதத்தினர் காச நோய் தொற்றுவதினின்றும் காப்பாற்றப்பட்டிருப்பதாக மாநில பொது சுகாதார இலாகா தெரிவித்திருக்கிறது.

காசத் தடுப்புக்காக சர்க்கார் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எதிராக நடத்தப்படும் பிரச்சாரத்திற்கு மக்கள் செவி சாய்க்க வேண்டாமென்றும், சர்க்கார் அதிகாரிகளுடன் ஒத்துழைத்து அத்தகு சுகாதார நடவடிக்கைகள் வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்றும் அந்த இலாகாவினர் மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அகாலியருக்கு விடுதலை

பஞ்சாப் சர்க்கார் முடிவு?

பஞ்சாபில் கடந்த 60 நாட்களுக்கு மேலாக உரிமைக் கிளர்ச்சியில் ஈடுபட்ட பல்லாயிரவரை சிறைப்பிடித்து வைத்திருக்கும் பஞ்சாப் சர்க்கார் இப்போது அவர்கள் எல்லோரையும் விடுதலை செய்துவிடலாம் என்று எண்ணிக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

டில்லியில் உள்ள சீக்கிய இளைஞர் சங்கம், பஞ்சாபில் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்குவதற்காக எல்லா அகாலி கிளர்ச்சிக்காரர்களையும் விடுதலை செய்துவிட வேண்டுமென பஞ்சாப் சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

கடந்த ஞாயிறன்று இந்த சங்கத்தின் பிரதிநிதிகள், பஞ்சாப் முதன் மந்திரி பீம்சென் சச்சாரை சாந்தி காரில் சந்தித்தபோது, எல்லா அகாலி தலைவர்களையும் குர்கான் சிறைக்கு மாற்றவேண்டும் — அப்போது அவர்கள் ஒன்று கூடி பேசி தங்களின் எதிர்கால நடவடிக்கை பற்றி முடிவு செய்ய வழி ஏற்பட முடியும் என்று கூறியதாகவும் அதற்கு முதன் மந்திரி இணங்கியதாகவும் கூறப்படுகிறது

நோயாளிகள் வெளியேற்றப்படுவர்?

சென்னை, ஜுலை 21—

சென்னையிலுள்ள சர்க்கார் பொது மருத்துவ மனையில் உள்ள நோயாளிகளைக் கூடிய மட்டும் வெளியே அனுப்பிவிட ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும், மிக அவசரமான 'கேஸ்'களை (அவசர சிகிச்சை) மட்டுமே அங்கு அனுமதிக்க வேண்டுமென்றும் மருத்துவ மனை அதிகாரிகளுக்கு சென்னை பிரதம மருத்துவ அதிகாரி உத்தரவிட்டிருக்கிருர் என்று தெரியவருகிறது.

நகரசபை உறுப்பினர்கள் மீது இலஞ்சக் குற்றச்சாட்டு

சபைத் தலைவர் தீர்ப்பு?

சங்லி, ஜுலை 20—

சங்லி நகர சபையில் பெரும்பான்மைக் கட்சியினராயுள்ள 'லோக்ஷாஹி அகாதி' கட்சி உறுப்பினர் சிலர்மீது, இலஞ்சக் குற்றம், பொதுப்பணத்தை கையாடியது போன்ற குற்றங்கள் சாட்டி சட்லாஸ்கர் என்ற உறுப்பினர் தாக்கல் செய்த 12 அம்ச குறிப்பொன்றை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள முடியாதென சபைத் தலைவர் தள்ளுபடி செய்திருக்கிருர்.

ஒன்பது எதிர்க் கட்சியினர் கோரியதின் பேரில் நகர சபையின் விசேடக் கூட்டம் கூட்டப்பட்டது. நகர சபை ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் கட்சியினர்மீது குற்றம் சாட்டப்பட்டதால் கூட்டம் சலசலப்புடன் நடைபெற்றிருக்கிறது.

இந்தியாவிற்கு நிதி உதவி குறைகிறது!

அமெரிக்க நிதி ஒதுக்கும் குழுவின் முடிவு?

இந்தியாவிற்கு ஒதுக்கப்படும் நிதி உதவித் தொகையில் 6-ல் ஒரு பகுதியை—அதாவது, மேலும் ஒரு கோடி டாலரைக் குறைத்து விடும்படி அமெரிக்க நிதி ஒதுக்கும் குழு, செனேட் சபையிடம்சிபாரிசு செய்துள்ளதாம்.

இந்தியாவின் அபிவிருத்திக்கு அமெரிக்க சர்க்கார் 7 கோடி டாலர் ஒதுக்கவேண்டுமென்று ஐசனேவர் கேட்டுக்கொண்டதில், அமெரிக்க மக்கள் சபை ஒருகோடி டாலர் குறைத்து அனுமதித்ததும், தற்போது மீண்டும் அந்த ஆறு கோடி டாலரில் ஒரு கோடியைக் குறைக்குமாறு நிதி ஒதுக்கல் குழு சிபாரிசு செய்திருப்பதும் இங்கு கருதத் தக்கவையாகும்.

நிதி ஒதுக்கல் குழு, இந்தியாவுக்கு செய்யப்படும் நிதி உதவி 5 கோடி டாலருக்கு மேல் இருக்கக் கூடாது என்று, அமெரிக்க சர்க்கார் நிதி ஒதுக்கல் மசோதாவிற்கு திருத்தம் செய்துள்ளது. இத் திருத்த மசோதா செனேட் சபையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிகிறது.

இந்தியாவிற்கு ஒதுக்கும் பணத்தைக் குறைப்பதற்கான காரணம் என்னவென்பதை, குழு தெரிவிக்கவில்லையாம்!

ஆனல் நேபாளத்திற்கு உதவியாக ஒதுக்கப்பட்ட 10 லட்சம் டாலரில் எதுவும் குறைக்கப்படாது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தியாவைப் போன்றே, யூகோஸ்லேவியாவிற்கும் இராணுவ நிதி உதவிக்கென ஒதுக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்த தொகையான 3½ கோடி டாலர் 3 கோடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

இந்தியா, யூகோ ஆகிய இரு நாடுகளையும் தவிர, நிதி உதவி அளிக்கப்பட இருக்கும் மற்ற நாடுகளின் தொகையில் 'வெட்டு' எதுவும் இல்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனேவர், எல்லா நாடுகளுக்குமாக ஒதுக்க வேண்டுமென்பதற்காக 326½ கோடி டாலர் கோரியிருந்தார். அத்தொகையில் சுமார் 63 கோடி டாலர் வரையிலும் மக்கள் பிரதிநிதிகள் சபையால் குறைக்கப்பட்டது; ஆனல் இரண்டு சபைகளின் கூட்டுக்குழு, அந்தக் குறைப்புத் தொகையான 63 கோடி டாலரில் 56½ கோடியை மீட்டுக் கொடுத்ததாம்!

'வெட்டு'களை நீக்க முயற்சி!

அமெரிக்க செனேட் சபை, நிதி ஒதுக்கல் குழுவினரின் 'வெட்டு'க்களை நீக்குவதில் முயற்சி எடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது

செய்திச் சுருள்

★

நிதியளிப்பு

17—7—55 இரவு 8 மணிக்கு, தோழர் எம். எஸ். இராமசாமி அவர்களுக்கு நிதியளிப்பு விழா திருநகரம் சாலியர் ஆரம்ப பாடசாலையில் திரு. சோ. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம், திரு. சோ முத்துச்சாமி அவர்கள் ரூ 400 கொண்ட பண முடிப்பு வழங்கிய பின், தலைவர்கள், தோழர் எம் எஸ் இராமசாமி அவர்கள் திராவிட சமுதாய மக்களுக்கு செய்துவரும் தொண்டு பற்றியும், குறிப்பாக, நலிந்து கொண்டுவரும் 'கைத்தறி நெசவாளர் மக்களுக்காக செய்த சேவை குறித்தும் பேசிய பின், 'தற்சமயம் அவர் உடல்நிலை குறித்தும் அவருக்கு நாம் செய்ய வேண்டிய கடமையில் இதுவும் ஒன்று' என்று குறிப்பிட்டார்.

முடிதிருத்தும் தொழிலாளர் சங்கம்

19—7—55 பகல் 11 மணிக்கு, பூவிருந்தவல்லியில், பஞ்சாயத்துப் பூங்காவில், தோழர்கள் பி. சின்னசாமி, வைத்தியலிங்கம் ஆகியோர் முன்னிலையில், சங்கம் நிறுவப்பட்டு, தோழர் ஜி கன்னையனை செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. பின்னர், செவ்வாய்தோறும் கடைகளை மூடவேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குழந்தை இலக்கிய கழகம்

கழகத்தின் 5-வது ஆண்டுப் பொதுக் கூட்டம் 17—7—55 மாலை 3 மணிக்கு, திரு. ஜெ. எத்திராஜன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் பூவண்ணன் அவர்களைத் தலைவராகக்கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

குழந்தை இலக்கிய வளர்ச்சிக்காக இவ்வாண்டு கழகச் சார்பில் சிறுவர்களுக்கெனக் குறைந்த விலையில் சிறந்த கதைப் புத்தகங்கள் வெளியிடுவதென்றும், சில போட்டிகள் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நாகர்களின் விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்க...

அசாம் கவர்னர் அவசரச் சட்டம் பிறப்பித்திருக்கிருர்

ஷில்லாங் மாநிலத்தில் அமைதியற்றிருக்கும் வட்டங்களில் அமைதியையும், ஒழுங்கையும் நிலை நாட்டவும், குழப்பங்களை ஒடுக்க அதிகாரம் வழங்கவுமாக அசாம் கவர்னர் ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்திருக்கிருர்.

'ஆயுதக் கிடங்குகளை அழிக்கவும், குழப்பம் விளைவிப்போரைச் சுட்டுக்கொல்லவும்' சில அதிகாரிகளுக்கு இந்த அவசரச் சட்டம் அதிகாரம் வழங்குகிறதாம்.

நாகமலைப் பகுதி மாவட்டத்தின் சில வட்டங்களில் 'குழப்பம்' நிலவுவதாக, மாநில சர்க்கார் தலைமைச் செயலாளர் இரண்டு நாள் முன் அறிவித்திருக்கிருர்.

வழிப்பறிக் கொள்ளை

ஐதராபாத், ஜுலை 22—

19-ந் தேதியன்று மாலை, ரத்னம்மா என்ற பெண்மணியை வேணுகோபால் என்ற 28 வயது இளைஞர், கத்தியைக் காட்டிப் பயமுறுத்தி, அவரிடமிருந்த 14 கல் பதித்த வைர மோதிரங்கள் இரண்டு, 15 தோலா எடையுள்ள ஒரு தங்கச் சங்கிலி, 6 தோலா எடையுள்ள ஒரு ஜதை தங்க வளையல்கள் இவற்றைப் பறித்துக் கொண்டாராம்.

குற்றவாளி தலைமறைவாயிருப்பதாயும், அவனைப் பற்றித் தகவல் தருகிறவருக்கு பரிசு தரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதாயும் தெரியவருகிறது.

தென்னாடும் - வடநாடும்

சென்னை பிரதம நீதிபதி கருத்து

"'தென்னாட்டின் மீது வடநாடு ஆதிக்கம் செலுத்துகிறது,' என்ற குற்றச்சாட்டு பற்றி சிலர் என்னதான் கூறினாலும்— கலை, கலாச்சாரம் இவற்றைப் பொறுத்தவரையில், தென்னாடு, நிச்சயமாக வடநாட்டை வெற்றி கொண்டிருக்கிறது;

"உண்மையான இந்தியக் கலாச்சாரம், தென்னாட்டில்தான் சேகரிக்கப்பட்டு, வளர்க்கப்படுகிறது,"

—என்று சென்னை உயர்நீதி மன்ற பிரதம நீதிபதி பி. வி. இராஜமன்னார் அவர்கள், திருவல்லிக்கேணியில் நடைபெற்ற விழா ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"தென்னாட்டின் மீது வடநாட்டவர் ஆதிக்கம் செலுத்துவதாக ஏராளமான குற்றச்சாட்டுகள் எழுவதை நீங்கள் அறிவீர்கள். அதனுடைய பொருளாதார, அரசியல் அம்சங்கள் பற்றி எனக்குத் தெரியாது;

"ஆனால் கலாச்சாரத்தைப் பொறுத்தமட்டில் தென்னாடு, வடநாட்டை வெற்றி கொண்டிருக்கிறது என்பதற்கு நல்ல பல அறிகுறிகள் இருக்கின்றன;

"நடனத்தைப் பொறுத்தமட்டில் பரத நாட்டியமும், கதகளியும், இந்தியாவில் உள்ள அனைவரின் உள்ளத்தையும் ஈர்த்திருக்கின்றன;

"நமது சங்கீதம்கூட வட இந்தியரை ஊக்கப்படுத்தியிருக்கிறது,"

என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

நகரசபை தலைவர்கள் மாநாடு

சென்னைக்கு ரூ. 12¼ கோடி நிதி கோரப்பட்டிருக்கிறதாம்!

பம்பாய், ஜூலை 21—

பம்பாய், கல்கத்தா, பெங்களூர், ஆமதாபாத், புனா, சென்னை ஆகிய பெரும் நகரசபைத் தலைவர்கள் மாநாடு முடிவடைந்துவிட்டது.

ஆறு நகர சபைகளுக்குமாக மொத்தம் ரூ. 135 கோடி, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் தர வேண்டுமெனக் கோரப்பட்டிருக்கிறது.

தண்ணீர் வசதி, சாக்கடை வசதி, வைத்திய வசதி, சேரி சுத்தம் செய்தல் முதலியவற்றிற்காக இந்த நிதி கோரப்படுகிறதாம்.

சுமார் 12¼ கோடி சென்னைக்கும், ரூ. 48 கோடி பம்பாய்க்கும், ரூ. 46 கோடி கல்கத்தாவுக்கும், ரூ. 10½ கோடி ஆமதாபாத்திற்கும், ரூ. 4¼ கோடி பெங்களூருக்கும், ரூ. 4½ - கோடி புனாவிற்கும் கோரி திட்டம் வகுக்கப்பட்டதாம்.

தி. த. நா. காங்கிரஸ்

திரு-கோச்சி காங்கிரசுடன் ஐக்கியமாகிவிட்டதாம்!

பனம்பள்ளி தரும் தகவல்

சென்னை, ஜூலை 21—

திரு-கொச்சி மாநிலத்தின் உபரி நீரை, திரு-கொச்சி, சென்னை ஆகிய இரு மாநிலங்களும் கூட்டாகச் சேர்ந்து உபயோகித்துக்கொள்வது பற்றிய யோசனை பற்றி கேட்கப்பட்டபோது, 'இப்போது நான் அதுபற்றி எதுவும் கூறாமலிருந்துவிடுவதையே விரும்புகிறேன்' என்று திரு-கொச்சி முதலமைச்சர் பனம்பள்ளி கோவிந்தமேனன் குறிப்பிட்டிருக்கிறார்.

எதிர்க்கட்சியினர் காங்கிரஸ் மந்திரிசபை மீது கொண்டு வரப்போவதாகக் கூறியிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் குறிப்பிட்டு, திரு-தமிழகக் காங்கிரசின் கருத்து பற்றிக் கேட்டபோது அவர் கூறினார்:—

"திரு-தமிழ்நாடு காங்கிரசார், திரு-கொச்சி காங்கிரஸ் கட்சியுடன் முழுவதும் ஐக்கியமாகிவிட்டனர்; இப்போது அவர்கள் திரு-கொச்சி காங்கிரசின் ஒரு பகுதியினராகவே இருக்கின்றனர்; இப்போது, 'காங்கிரசுக்காகப் போராடவும் உறுதி பூண்டிருக்கிறோம்,' என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்."

பஞ்சாபில் மீண்டும்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பஞ்சாப் மாநிலத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சி வேண்டுமென்ற கோரிக்கையும் ஒரு சாரரால் எழுப்பப்பட்டிருப்பதால், பஞ்சாப் கவர்னரான சி. பி. என். சிங், குடியரசுத் தலைவர், பிரதமர் நேரு, பண்டிதபந்த் ஆகியோரைச் சந்தித்துப் பேசிய நிகழ்ச்சிக்கு அரசியல் வட்டாரங்கள் அதிக முக்கியத்துவம் தருகின்றன.

பஞ்சாபில் நீடித்த காங்கிரஸ் மந்திரி சபை இருக்க முடியாதென்ற நிலை வளர்ந்துவிட்டதாயும், குடியரசுத் தலைவராட்சியைத் தவிர வேறு வழி இல்லை என்றும், பஞ்சாப் மாநில அரசியல் நிலைகள் கூறுவதாக, டெல்லி வட்டாரங்கள் கருதுகின்றனவாம்!

இந்தோனேஷிய மந்திரி சபை இன்று விலகுகிறது?

இந்தோனேஷியாவில், அலி சஸ்திரோமித் ஜோ ஜோ தலைமையில் உள்ள அமைச்சரவை இன்று இராஜினாமா செய்துவிடக் கூடுமாம்.

இராணுவத்தில் ஒரு அதிகாரியின் நியமனம் குறித்து இராணுவத்திற்கும் — சர்க்காருக்கும் ஏற்பட்ட நெருக்கடியின் விளைவே இதற்குக் காரணமாகும்.

இந்தோனேஷியத் தலைவர் டாக்டர் சுகர்னோ தற்போது சொந்த நாட்டில் இல்லை என்பதும், அவர் மெக்காவிற்குச் சென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

அதிகார மாற்றம்தான் பிரச்சினை என்றால் சமாதான வழியே கிடையாதாம்!

'கோவா பிரச்சினை'யில் போர்ச்சுகீசியரின் போக்கு!

லிஸ்பன்—

"இந்தியாவில் உள்ள போர்ச்சுகீசியப் பகுதிகளின் ஆதிபத்திய உரிமையை இந்தியாவுக்கு மாற்றித் தருவதுதான் பிரச்சினை என்று கருதப்படுமானால், சமாதான வழிகளின் மூலம் அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட முடியாதென்பது திண்ணம்,"

என்று, போர்ச்சுகீசியப் பிரதமர் அலுவலகத்திலிருந்து, கோவா தகராறு பற்றி வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது.

"நெருங்கிய உறவும் தொடர்பும் கொள்வது பற்றியதுதான் கோவா பிரச்சினை என்றால், அதற்குப் பரிகாரம் காணமுடியுமென்பது மட்டுமல்ல—பரிகாரம் காணுவது மிகச் சுலபமானதுங்கூட."

என்றும், அந்த அறிக்கை கூறுகிறது.

மாநில மாநாட்டு நிதிக்காக மாவட்டங்கள் இதுவரை செலுத்தியுள்ள பங்கு

★

சென்னை மாவட்டம்	ரூ.	2,493–12—6
தஞ்சை மாவட்டம்		2,001—0—0
திருச்சி மாவட்டம்		1,701—0—0
கோவை மாவட்டம்		1,400—0—0
மதுரை மாவட்டம்		1,126—0—0
நெல்லை மாவட்டம்		475—0—0
செங்கற்பட்டு மாவட்டம்		445—0—0
வட ஆற்காடு மாவட்டம்		188—0—0
பெங்களூர் மாவட்டம்		108—2—0
ஆகமொத்தம்	ரூ.	9,937–14—6

இம்மாநாட்டு வரவேற்புக் குழு உறுப்பினர்கள் கட்டணமும், தனிப்பட்ட தோழர்கள் அனுப்பிய தொகையும் இந்நிதிக் கணக்கில் சேர்க்கவில்லை. அவைகள் தனியாக பின்னர் வெளியிடப்பெறும். இதுவரையில் கொடுத்துள்ள மாவட்டங்கள் பாக்கித் தொகையையும், இதுவரை ஒன்றுமே அனுப்பாமல் நிதி சேர்க்கும் முயற்சியிலீடுபட்டிருக்கும் தென்ஆற்காடு, நாஞ்சில், இராமநாதபுரம் மாவட்டங்களும் காலங்கடத்தாமல் மாநில மாநாட்டு நிதித் தொகையை உடன் அனுப்புமாறு செய்ய வேண்டுகின்றோம்.

இராயபுரம்,
சென்னை-13
23—7—55

—பொறுப்பாளர்,
தி. மு. கழகம்,
தலைமை நிலையம்

திருவள்ளுவர் திருநாள்

[ஜூலை 25 முதல் 31 வரை—வள்ளுவர் வாரம்]

சென்னை-புரசை, குறள்நெறிக் கழகத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், கீழ்வரும் வேண்டுகோளை விடுத்துள்ளார்:—

"வள்ளுவனின் வான்புகழை—தனிப் பெருமையை — உலகியல் கற்ற பேரறிவை—புலமைத் திறத்தை—பொதுமை நோக்கத்தை—நடுநிலை இகவா நீதியை அறிஞர் உலகு நன்கறியும்.

"இமிழ் கடல் எல்லைத் தமிழகத்திலே பிறந்து வாழ்ந்த வள்ளுவர், அமிழ்தினும் இனிய தமிழிலேயே அறம் பாடி, தம்மினத்திற்கே அழியாப் பெருமை தேடித் தந்திருப்பினும், இன்றைய தமிழர் அவனை அறிவர்—அவன் புகழை உணர்வர்—அவன் கண்ட நெறியிலே நிற்பர் என்று கூறவோ வழியில்லை; அந்த அவல நிலையைப் போக்க, இரண்டு ஆண்டுகட்கு முன்பு, புரசை குறள் நெறிக் கழகம், ஜூலை இறுதி வாரத்தை 'வள்ளுவர் வார'மெனக் கொண்டாடத் தீர்மானித்தது;

"அடுத்து 11—7—54ல் அண்ணாமலை நகரில், உயர்திரு நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் தலைமையில் கூடிய சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டிலும், 'ஜூலை இறுதி வாரத்தில் (ஞாயிறு அல்லாத) ஒரு நாளைத் திருவள்ளுவர் திருநாளென'க் குறித்து, 'சென்னை அரசியலார் பொதுவிடுமுறை அளிக்கவேண்டு'மெனவும், 'அந்த வாரத்தையே—வள்ளுவர் வாரமாகக் கொண்டாட வேண்டு'மென்றும் ஒரு மனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது; சென்ற ஆண்டில், பற்பல இடங்களிலும், இதனைத் தழுவி, விழாக் கொண்டாடியுள்ளனர்;

"26—12—54ல், மதுரையில் நடைபெற்ற குறள் மாநாட்டிலும், 16, 17—4—55 ஆகிய நாட்களில், சேலத்தில் நடைபெற்ற 'திருவள்ளுவர் நினைவு நாள்' மாநாட்டிலும், 14, 15—5—55 நாட்களில் பெங்களூரில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டிலும், ஜூலை இறுதி வாரத்தையே உறுதிப்படுத்தி, 'ஜூலை 25-ந் தேதி அரசியலார் விடுமுறை வழங்க வேண்டு'மெனக் கேட்டுத் தீர்மானங்கள் நிறைவேறியுள்ளன; மாநாடுகளில் கலந்துகொண்ட அறிஞர்கள் பலரும் இதனை ஆதரித்துள்ளனர்.

"எனவே, 'ஜூலை 25—வள்ளுவர் நாள்; ஜூலை இறுதி வாரம்—வள்ளுவர் வாரம்,' என்பது—கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் கொண்டாடுவதற்கு ஏற்ப அமைந்துள்ளது என்பதாலேயே — தமிழறிஞர், ஆசிரியர் அனைவராலும் ஒருமுகமாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது; எனவே, இதனையே எல்லோரும் ஏற்று, ஒன்றுபட்டு கடமையாற்ற வேண்டுகிறோம்.

"ஏழையின் இதயம் மலர, உழைப்பாளி உவகை கொள்ள, அடிமையின் தளையை அறுக்க, அனைத்தையும் அபலையும் வாழ்வு பெற, பெண்ணின் பெருமை ஓங்க, வள்ளுவர் விழா வழி கோலும்!

"குலத்துக்கொரு நீதியாம் கொடுமையைக் களைய, தமிழ்ப் பூஞ்சோலையிலே நெளிவும் வைதிக நச்சரவத்தை மாய்க்க, உரிமை—ஒப்புமை—தோழமை என்னும் புதுமணம் பரவ, பொதுவுடைமை வண்ணம் ஒளிர, மறுமலர்ச்சி நிலைபெற, வள்ளுவர் விழாவையே வழியாகக் கொள்வோம்!

"அறம் தழைக்க, பொருள் செழிக்க, இன்பம் கொழிக்க, குறள் நெறி நிலைக்க வள்ளுவர் விழா எடுப்பீர் என வேண்டிக் கொள்கிறோம்! நன்றி மறவாதீர்! நல்லதை செய்யத் தவறாதீர்! வாழ்க வள்ளுவர்! வளர்க குறள் நெறி"

குடந்தை தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

24-7-55 காலை 10 மணிக்கு, துவரங்குறிச்சியில் செயற் குழு கூடும். குழுவில், 17—7—55 கூட்ட வரவு-செலவு, கழகப் பணிகள் குறித்து முடிவெடுக்கப்படும். தி. மு. கழக துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் கழக அலுவல் குறித்து ஆய்வுரையாற்றுவார்.

சைகோன் சம்பவம்

தியெமின் சர்க்காரின் தீர்மானமே காரணம்?

புதுடில்லி, ஜூலை 22—

'தென்வியட்நாம் பிரதமர் டின் டியெம் தலைமையில் உள்ள மந்திரி சபை நிறைவேற்றிய தீர்மானத்தின் விளைவாகத்தான் அகில உலகப் போர் நிறுத்த மேற்பார்வைக் குழு உறுப்பினர்களைக்கூட மக்கள் கூட்டம் தாக்கிற்று,' என்று, தகவல் கிடைத்துள்ளது.

அந்தக் குழுவைச் சேர்ந்த போலந்து நாட்டவரை மட்டுமின்றி, இந்தியக் குழுவினர்கூட கம்யூனிஸ்டு கருத்துடையவர்கள் என்றும், அவர்களை அகற்றி விடுவது தெற்கு வியட்நாம் சர்க்காரின் நோக்கங்களில் ஒன்று என்றும் சர்க்காரின் தீர்மானம் கூறுகிறதாம்.

பெங்களூர் மாவட்டக் கழக நடவடிக்கைகள்

★

"கோலார் தங்கவயல் தி.மு.க. நிர்வாகக் குழு, கழக சட்டதிட்டத்திற்கு முரண்பாடாக நடைபெறுகின்ற காரணத்தால், 18—7—55-லிருந்து தற்காலிகமாக கலைக்கப்பட்டிருக்கிறது. புதிய நிர்வாகக் குழுவினை அமைக்க விரைவில் உறுப்பினர் கூட்டம் நடைபெறும்," என்று, பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ்.வி. பதி அறிவிக்கிறார்.

கழகக் கூட்டம்

24—7—55 ஞாயிறு அன்று, கீழ்நாத்தூரில் (வ. ஆ மாவட்டம்) நடைபெறும். தோழர் வே. அ. இளஞ்செழியன் பேசுவார்.

மும்முனைப் போராட்ட நினைவு நாள்

24—7—55 மாலை 6 மணிக்கு, சென்னை, எழும்பூர், வீராசாமிப் பிள்ளை தெருவில், சென்னை 32-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், தோழர் ஏ. கே. முத்தரசு தலைமையில் நடைபெறும். தோழர்கள் இளஞ்சேரலாதன், ஆர். டி. அரசு, டி. என். இராவணன் ஆகியோர் பேசுவர்.

★

24—7—55 மாலை 6½ மணிக்கு, சென்னை 26-வது வட்ட (பெரிய மெட்டு கிளை) தி. மு. கழகப் பணிமனையில், தோழர் கன்னியப்பன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

வள்ளுவர் திருநாள்

24—7—55 மாலை 6 மணிக்கு, சென்னை-இராயபுரம், ஆதம் சாயபு தெருவில், (கல்மண்டபம் போலீஸ் நிலையத்திற்கு அருகாமையில்) வள்ளுவர் திருநாள், தோழர் கி. தியாகராசன் தலைமையில் நடைபெறும். தோழர் எம். கே. சண்முகனார் துவக்கிவைப்பார் தோழர்கள் க. அன்பழகன், கண்ணதாசன் நன்னன் ஆகியோர் பேசுவர்.

குறள் வகுப்பு

24—7—55 காலை 9 மணிக்கு, திருச்சி, பெரிய செட்டித் தெரு, பாண்டியன் படிப்பகத்தில், திரு. தி. ரா. தருமராசன் குறள் வகுப்பு நடத்துவார்.

முகவரி மாற்றம்

பெங்களூர் மாவட்ட தி. மு. கழகத்தின் காரியாலயம் கீழ்க் கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. கடிதங்கள் கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதவேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:—

எஸ். வி. பதி, செயலாளர், பெங்களூர் மாவட்ட தி. மு. கழகம், 53, புதிய கலாசிபாளையம் எக்ஸ்டென்ஷன், பெங்களூர்—2.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

★

ஜூலை 24: திருவண்ணாமலை (மாவட்டக் கமிட்டிக் கூட்டம்)
மாலை: கீழ்னாத்தூர் பொதுக்கூட்டம்
26: சென்னை (கொருக்குப் பேட்டை)
28: வைரிசெட்டிபாளையம்
30: சென்னை (சைதாப் பேட்டை)
31: திண்டுக்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.